கனம் தலைமை நீற்றனையல் நடுவர் / சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம்
அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319412

1. District : இராமநாதபுரம் PS: ஆதக மரிவு Year: 2025 FIR No.: 10/25 Date: 13.05.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: P.C. Amendment Act, 2018 Sections பிரிவுகள்: 7(b) of P.C. Amendment Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 12.05.2025 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : மதியம் Time to :
நேர அளவு நேரம் முதல் சுமார் 12.00மணி நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : காலை 10.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.05.2025 நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நொகுதி-I நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : 13.05.2025
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்-மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 கி.மி தென்மேற்கு
Beat Number : (b) Address : கீழக்கொடுமலூர் கிழ பிரிவு நீர்வாக
முறைக் காவல் எண் முகவரி அலுவலர் அலுவலகம் முதுகளத்தூர்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : அ. சுரேஷ் குமார் (b) Father's/ Husband's Name : அய்யாக்கண்ணு
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 35/25 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஆசிரியர் (g) Address : 8 A, காசிம் நகர், கீழாயூர் கிராமம்
தொழில் தனியார் பள்ளி முகவரி இளையான்குடி நாலுகா, சிவகங்கை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
நீரு. சரவணன், கிராம நிர்வாக அலுவலர், கீழக்கொடுமலூர் கிழ, முதுகுளத்தூர் நாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முன்றயிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் ஏதுமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : N.ராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 13.05.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி அ.சுரேஷ்குமார் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, கீழக்கொடுமலூர் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் என்பவரது முன்நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊத்க பிரிவு குற்ற எண்.10/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 13.05.2025 ஆம் தேதி 10.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் விபரம் பின்வருமாறு அனுப்புநர் அ. சுரேஷ் குமார், வயது 35/2025 த/பெ. அய்யாக்கண்ணு, 8A, காசிம்நகர், கீழாயூர் கிராமம், இளையான்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13.5.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13.5.25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.05.2025 - 11.00 மணி

Name: பெயர் ந.ராஜேஸ்வரி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் .....
ஊ.த.க மாவு
இராமநாதபுரம்

இராமநாதபுரம்ஊழல்தடுப்புமற்றும்கண்காணிப்புபிரிவுகுற்றஎண் 10/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின்தொடர்ச்சி

அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் இளையான்குடியில் பிரைவேட் ஸ்கூலில் டீச்சராக வேலை பார்த்து வருகிறேன். எனது தகப்பனார் பெயரில் முதுகுளத்தூர் தாலுகா, கீழக்கொடுமலூர் கிராம சர்வே எண்.103/4Bல் 0-24.5 ஹெக்டர், சர்வே எண்.3/5Bல் 0-18 ஹெக்டர், சர்வே எண்.58/2B2ல் 0-9 ஹெக்டர் ஆகிய மூன்று இடங்களை கடந்த 07.03.2025 ஆம் தேதி எனது பெயரில் பட்டாமாற்றம் செய்ய ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். கடந்த 31.03.2025ஆம் தேதி கீழக்கொடுமலூர் விஏஓ சரவணன் என்பவர் எங்கள் இடத்தை பார்வையிட்டு சென்றார். அதனைத்தொடர்ந்து கடந்த 30.04.2025 ஆம் தேதி எனது பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என எனது செல்போனுக்கு மெசேஜ் வந்தது. அந்த பட்டாவை நான் இசேவை மையத்தில் பிரிண்டு எடுத்தேன். கடந்த 11.05.2025 ஆம் தேதி இரவு சுமார் 08.15 மணியளவில் விஏஓ சரவணன் எனக்கு போன் செய்து என்னப்பா நடைமுறை எல்லாம் தெரியாதா பட்டாவை மாத்தியிருக்கேன் ஒன்னும் கவனிக்க மாட்டிங்கிற, நாளைக்கு என்னை வந்து பாரு என சொன்னதால் நேற்று 12.05.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு பட்டாமாறுதல் சம்மந்தமாக கீழக்கொடுமலூர் விஏஓ அலுவலகம் செல்லும் வழியில் பரமக்குடியில் இருந்து விஏஓ சரவணன் செல்போனுக்கு நான் போன் செய்து பேசினேன். அதற்கு அவர் நான் பார்த்திபனூரில் இருக்கிறேன் நீங்க பார்த்திபனூர் பஸ்ஸடாண்டுக்கு வாங்க எனச்சொன்னார். நான் சுமார் 12.00 மணியளவில் பார்த்திபனூர் பஸ்ஸாண்டுக்கு சென்று நேரில் விஏஓ வை சந்தித்து மேற்படி பட்டா சம்மந்தமாக விபரம் கேட்டேன். அதற்கு அவர் பணம் ரூ.6000/- கொடுங்க எனக்கேட்டார். அதற்கு நான் எதுக்கு பணம் கொடுக்கணும் எனக்கேட்டேன். அதற்கு விஏஓ, எனது இரண்டு இடத்திற்குரிய பட்டா மாறுதல் உத்தரவை என்னிடம் கொடுத்து விட்டு உங்களுக்கு இரண்டு பட்டாவ மாத்தியிருக்கேன் எனவும் ஒரு இடத்திற்கு ரூ.3000/-

வீதம் இரண்டு இடத்திற்கு ரூ.6000/- எனச்சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை எனக்கூறினேன். அதற்கு அவர் ரூ.3000/-யாவது கொடுங்க எனக்கேட்டார். அதற்கு நான் என் GPAY ல ரூ.1000/- வீட்டு செலவுக்காக தான் வச்சுருக்கேன் வேறு பணம் எதுவும் இல்லை எனச்சொன்னேன். அதற்கு விஏஓ பார்த்திபனூர் பஸ்ஸடாண்டு அருகில் உள்ள தினேஷ் டிராவல்ஸ் மற்றும் இசேவை மையம் என்ற கடைக்கு என்னை கூட்டிச் சென்று அங்குள்ள ஸ்கேனரில் ரூ.1000/-த்தை அனுப்புங்க அந்த பணத்தை நான் வாங்கிக்கிறேன் என வற்புறுத்தி கேட்டதனால் நான் GPayல் வைத்திருந்த ரூ.1000/-ஐ வேறு வழியில்லாமல் அனுப்பினேன். பின்னர் விஏஓ, மீதப்பணம் ரூ.2000/-த்தை நாளைக்கு 13.05.2025 ஆம் தேதி காலையில எனக்கு போன் பண்ணிட்டு என் ஆபிசுக்கு வந்து கொடுங்க என்று சொன்னார். பின் நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்த போது அரசு பணியை செய்ததற்கு வெகுமதியாக லஞ்சப்பணம் ரூ.2,000/- கேட்ட முதுகுளத்தூர் தாலுகா, கீழக்கொடுமலூர் குரூப் விஏஓ சரவணன் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட முதுகுளத்தூர் தாலுகா, கீழக்கொடுமலூர் குரூப் விஏஓ சரவணன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.இப்படிக்கு (ஒப்பம்) A.சுரேஷ் குமார். Received the complaint on 13.05.2025 at 10.00 hrs and Enquired the Character and Antecedents of the complainant and accused and registered a case in Ramnad V&AC, Cr.No.10/2025 u/s 7 (b) of P.C. Amended Act 2018 at 10.30 hrs. (Sd) N. Rajeswari, Inspector of Police. V&AC, Ramanathapuram 13.05.2025. இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்புநீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

13.5.25

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.